Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror

www.tamilmirror.lk

FRIDAY, MAY 17, 2024

வெள்ளிக்கிழமை மே 17, 2024 | ஒளி: 09 கதிர்: 254 | பக்கம்:07 | நகரப்பதிப்பு | FREE

ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியில்

# “மதுபான அனுமதி இரத்து”

## சஜித் அறிவிப்பு; ஒன்றிணையுமாறு அழைப்பு



போதையற்ற நாட்டை உருவாக்குவோம் என பல வாக்குறுதிகளை வழங்கி பல்வேறு அரசாங்கங்கள் ஆட்சிக்கு வந்தாலும், ஆட்சிக்கு வந்த உடனேயே மதுபான அனுமதிப் பத்திரங்களைக் கொடுத்துள்ளனர். இதன் காரணமாக, பாடசாலை மட்டத்தில் மது ஒழிப்பு வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட வேண்டும். இதற்கு எதிராகத் தாய், தந்தையர் ஒன்றிணைய வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கோரிக்கை விடுத்துள்ளார்.

தேர்தலை இலக்காகக் கொண்டு அரசியல்வாதிகளுக்கு மதுபான அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்ட வருகிறது. ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் இந்த மதுபான அனுமதிப் பத்திரங்கள் இரத்து செய்யப்படும். இதுகுறித்து தினமும் பாராளுமன்றத்தில் பேசப்பட்டு வருகிறது. பாடசாலை மட்டத்தில் மது, போதைப்பொருள் மற்றும் புகைத்தல் பாடசாலைகளை ஆக்கிரமித்துள்ளது. இதனை முறியடிப்பதற்கான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும்.

தொடர்ச்சி P2

## “ஆங்கில வினாத்தாள் இரத்து செய்யப்படாது”




கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் ஆங்கில மற்றும் விஞ்ஞான பாடங்களின் முறைகேடுகள் தொடர்பில் பரீட்சை திணைக்களம் விளக்கமளித்துள்ளது.

அதன்படி, விஞ்ஞானப் பரீட்சை தாளில் உள்ள சில கேள்விகள் பாடத்திட்டத்துக்கு வெளியே இருப்பது கண்டறியப்பட்டது. விஞ்ஞான பரீட்சை குழப்பகரமான வினாக்களுக்கு மாத்திரம் கருணை புள்ளிகள் வழங்கப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

கார் பந்தைய விபத்தில்

## சிறுமியும் மரணம்

ராமு தனராஜா



தியத்தலாவ நர்யகந்தவில் ஏப்ரல் மாதம் 21 ம் திகதி இடம்பெற்ற ஃபோக்ஸ்ஹில் மோட்டார் பந்தயத்தில் ஏற்பட்ட விபத்தில் படுகாயமடைந்த மற்றுமொரு சிறுமி உயிரிழந்தார். இந்த துன்பியல் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை எட்டாக (08) அதிகரித்துள்ளது.

சம்பவ தினத்தன்றே, 7 பேர் மரணித்ததுடன், 21 பேர் காயமடைந்து தியத்தலாவ மற்றும் பதுளை வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தனர்.

தொடர்ச்சி P2

## ஜனாதிபதி ரணில் இந்தோனேசியா பயணம்



இந்தோனேசிய ஜனாதிபதி ஜோகோ விடோடோவின் அழைப்பின் பேரில், இந்தோனேசியாவில் மே 18 முதல் 20 வரை நடைபெறும் 10வது உலக நீர் மன்றத்தின் உயர்மட்டக் கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கலந்துகொள்வார் என்று ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## “விரும்பியவாறு செய்ய முடியாது”



உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வேட்பு மனுக்களை இரத்து செய்வதை விரும்பியவாறு செய்ய முடியாது என தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

பாராளுமன்ற சட்டத்தின் மூலமாகவோ அல்லது உயர் நீதிமன்றத்தின் ஒப்புதலின் மூலமாகவோ மட்டுமே இதைச் செய்ய முடியும் என்றார்.

தொடர்ச்சி P2



## மன்னாரில் நினைவுக் கஞ்சி

ரொசேரியன் லெம்பெட்



மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளைத் தேடும் சங்கத்தின் ஏற்பாட்டில்

மன்னார் பேருந்து தரிப்பிடத்தில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு வியாழக்கிழமை (16) காலை இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளைத் தேடும் சங்கத்தின் தலைவி மனுவல் உதயச்சந்திரா தலைமையில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

மன்னார் மாவட்டத்தில் யுத்த காலத்தில் தங்கள் பிள்ளைகளை இழந்த பெற்றோர்கள், முப்படையினரால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளின் பெற்றோர்கள்,

தொடர்ச்சி P2

சஜித்–அனுர விவாத நாளன்று

## பொது விடுமுறை வழங்க கோருவேன்



ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாசவுக்கும், தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க எம்.பிக்கும் இடையிலான விவாதத்தை மக்கள் பார்க்கும் வகையில் அன்றைய தினத்தை பொது விடுமுறையாக அறிவிக்கப்பட வேண்டுமென அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## மைத்திரிக்கு எதிராக இலஞ்ச வழக்கு


முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்குழு உறுப்பினர் ஒருவர் இலஞ்சம் அல்லது ஊழல் தொடர்பான சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் செயற்குழு உறுப்பினரான மான்டேக் சரத்சந்திர இலஞ்சம் அல்லது ஊழல் தொடர்பான சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்குக் கடிதம் மூலம் இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

தொடர்ச்சி P2

## மின்சாரக் கட்டண குறைப்புக்கு அவகாசம்



மின்சாரக் கட்டணக் குறைப்பு சதவீதம் எதிர்வரும் ஜூலை மாதம் அறிவிக்கப்படும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. அதற்கான முன்மொழிவுகள் கிடைத்தவுடன் மின்கட்டணத்தைக் குறைக்கும் நடவடிக்கை தொடங்கப்படும். இதேவேளை, மின்சார கட்டணத்தைக் குறைப்பது தொடர்பான யோசனைகளைச் சமர்ப்பிக்க வெள்ளிக்கிழமை (17) வரை கால அவகாசம் வழங்குமாறு மின்சார சபை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

தொடர்ச்சி P2

## விஜயதாசவுக்கு எதிரான தடையுத்தரவு மனு நிராகரிப்பு

நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தவிசாளராக நியமித்த தீர்மானத்தை அமுல்படுத்துவதற்கு தடை உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி பதில் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தாக்கல் செய்த மனுவை, கொழும்பு பிரதான மாவட்ட நீதவான் சந்துன்விதான வியாழக்கிழமை (16) நிராகரித்துள்ளார்.

துமிந்த திஸாநாயக்கவினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள கருத்துக்களைக் கருத்திற்கொண்டு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்



சரத் ஏக்கநாயக்க, அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ, கீர்த்தி உடவத்த, ஜனாதிபதி நிமல் சிறிபால டி சில்வா, சிரேஷ்ட உப ஜனாதிபதி மஹிந்த அமரவீர ஆகியோருக்கு எதிராகவே இந்த மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## “தேயிலையை அழிக்காதே; கோப்பியை பயிரிடாதே”

### உடரதல்ல தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்

ஆ.ரமேஸ், பி.கேதீஸ்

தேயிலையை அழித்துவிட்டு கோப்பி பயிரிட நடவடிக்கை எடுத்துள்ள களனிவெளி பெருந்தோட்ட முகாமைத்துவ கம்பனியின் நிர்வாகத்துக்குக் கீழுள்ள நானுஓயா உடரதல்ல தோட்ட நிர்வாகத்தின் செயற்பாட்டுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

உடரதல்ல தோட்ட இரண்டு பிரிவுகளைச் சேர்ந்த 150க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் நானுஓயா நகரில் வியாழக்கிழமை (16) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

உடரதல்ல தோட்டத்தில் நல்ல தேயிலை விளைச்சலைத் தரக்கூடிய இலக்கம் (05) தேயிலை மலையில் அத்தோட்ட நிர்வாகம் தேயிலைச் செடிகளை அகற்றிவிட்டு கோப்பி பயிர்ச் செய்கையை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் குற்றஞ்சாட்டினர்.

அதேநேரத்தில் இந்த விடயம் தொடர்பாகத் தோட்ட நிர்வாகம் உடரதல்ல தோட்டத்



தொழிலாளர்கள், தோட்டத் தொழிற்சங்க தலைவர்களின் ஆலோசனைகளைப் பெறாது தான்தோன்றித் தனமாக இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது என தொழிலாளர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# “மதுபான அனுமதி இரத்து”

மது, போதைப்பொருள், சிகரெட் போன்றவற்றை ஊக்குவிப்பதற்கு இடமளிக்கக் கூடாது. இதற்கான வாயில்களை மூட வேண்டும். வாக்குரிமை இல்லாத 41 இலட்சம் பாடசாலை மாணவர்களின் முன்னேற்றத்திற்காகவே இந்த விடயத்தை இங்கு அடையாளப்படுத்திக் காட்டுவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழில்நுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 188ஆவது கட்டமாக 1,177,000 ரூபாய் பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் அனுராதபுரம், கலாவெவ, தம்புத்தேகம சோலம மகா வித்தியாலயத்திற்கு வழங்கி வைக்கும் நிகழ்வு மே 15ஆம் திகதி இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.


நமது நாட்டின் மொத்த கடன் சுமை 100 பில்லியன் டொலர்கள் ஆகும். 2-3 ஆண்டு காலகட்டத்துக்குக் கடனை செலுத்த வேண்டிய தேவை இல்லை என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. 2-3 ஆண்டுகளில், இருதரப்பு, பலதரப்பு, வெளிநாட்டு பிணைமுறி பத்திரதாரர்கள் மற்றும் உள்நாட்டு கடன் வழங்குநர்களுக்குத் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். இந்நிலையில் இருந்து மீள்வதற்குப் பொருளாதாரம் வேகமாக வளர்ச்சியடைய வேண்டும் என்றார்.

இதற்கு ஒவ்வொரு துறையும் வலுவாக முன்னேற வேண்டும். அன்னிய நேரடி முதலீட்டை வலுப்படுத்த வேண்டும். இதற்குத் திருட்டு ஒழிய வேண்டும். ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் அனைத்து அரச கொடுக்கல் வாங்கல்களும் வெளிப்படைத்தன்மையுடன் கையாளப்படும். 220 இலட்சம் மக்களை ஏமாற்றி, கொள்முதல் முறைக்குப் புறம்பாகத் திருடும் நிலையே தற்போது நாட்டில் காணப்படுகிறது என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் அரச நிதிக்கு மேலதிகமாக நன்கொடையாளர்களின் உதவிகளையும் பெற்று நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுப்போம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் தெரிவித்தார்.



## “ஆங்கில வினாத்தாள் இரத்து செய்யப்படாது”




இதேவேளை, ஆங்கிலப் பரீட்சை வினாத்தாள்களை இரத்து செய்யத் தேவை இல்லை எனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

கடந்த வாரம் நடைபெற்ற கல்வி பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சையின் ஆங்கில மொழி வினாத்தாள் பரீட்சையின் போது வட்ஸ்அப் ஊடாக பகிரப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது.

ஆங்கிலப் பாட வினாத்தாள் விடைகளைப் பெறுவதற்கு வட்ஸ் அப் ஊடாக பகிரப்பட்டுள்ளது. இது ஆங்கில மொழி வினாத்தாளின் இரகசியத் தன்மைக்கு பாதிப்பை ஏற்படுத்தவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

## சிறுமியும் மரணம்



காயமடைந்தவர்களில் ஒருவரைத் தவிர, ஏனைய அனைவரும் சிகிச்சையின் பின்னர் வீடுகளுக்குத் திரும்பிய நிலையில், 16 வயதுடைய சிறுமி தொடர்ந்தும் பதுளை பொது வைத்தியசாலையில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்தார்.

அவ்வாறு சிகிச்சைப் பெற்றுவந்த வெளிமடை பகுதியைச் சேர்ந்த 16 வயதுடைய சத்சரணி காவின்யா எனும் சிறுமியே சிகிச்சை பலனின்றி புதன்கிழமை (15) இரவு மரணமடைந்தார்.

## “விரும்பியவாறு...

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காகக் கோரப்பட்டுள்ள வேட்பு மனுக்களை இரத்து செய்வது தொடர்பில் அரசாங்கத்தின் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன அண்மையில் தெரிவித்திருந்தார்.

## மின்சாரக்...

இந்த முன்மொழிவுகள் ஆணைக்குழுவிடம் மே 1ஆம் திகதி வழங்கப்படவிருந்த நிலையில், மின்சார சபையின் கோரிக்கைக்கு அமைய பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு எதிர்வரும் 10ஆம் திகதி வரை கால அவகாசத்தை நீட்டித்துள்ளது. எவ்வாறாயினும், இது தொடர்பான முன்மொழிவுகளைக் கடந்த 10ஆம் திகதி இலங்கை மின்சார சபை ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கவில்லை என அதன் தலைவர் பேராசிரியர் மஞ்சுள பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதன்படி, முன்மொழிவுகளைச் சமர்ப்பிப்பது தொடர்பில் மின்சார சபைக்கு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## பொது விடுமுறை வழங்க...

ஆனால், அது தொடர்பான விவாதத்தை நடத்துவதில் இரு தரப்பினரும் ஆர்வம் காட்டவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

“ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் மற்றைய இரண்டு முக்கிய வேட்பாளர்களிடம் நான் ஒரு கோரிக்கையை வைக்க விரும்புகிறேன்.

தயவுசெய்து அந்த விவாதத்தை நடத்துங்கள். ஏனெனில் இந்த விவாதத்தில் இருவரும் பங்கு பெறாத போக்கே காணப்படுகிறது.


இந்த விவாதத்தை இலங்கை மக்கள் பார்க்கும் வகையில், பொது விடுமுறையை அறிவிக்கவேண்டும் என்று ஜனாதிபதியிடம் நான் கோரிக்கை விடுக்கவுள்ளேன்.

இவர்கள் இருவரின் விவாதத்தைப் பார்த்து எப்படி நாட்டைக் கட்டியெழுப்பப் போகிறார்கள் என்று பார்ப்போம். ஏனெனில், சவால்களை ஏற்றுக்கொள்ள முடியாதவர்கள் நாட்டை எவ்வாறு கட்டியெழுப்பப் போகிறார்கள் என முதலில் பார்க்க வேண்டும்.

இது ஒரு வாய்ச்சவடாலே.

இதைச் செய்ய முடியாது என்பது இரு தரப்புக்கும் தெரியும். ஒருவர் கடும் சிங்களத்தில் பேசுகிறார். மற்றையவர் கடும் ஆங்கிலத்தில் பேசுகிறார். இருவரும் பேசுவது இருவருக்குமே புரியாது. வாய்ச்சவடாலின்றி செயலில் காட்டுமாறு கேட்டுக்கொள்கிறோம்” என்றார்.

## ஜனாதிபதி ரணில் இந்தோனேசியா பயணம்



ஜனாதிபதி விக்ரமசிங்க மே 20 அன்று உயர்மட்ட மன்றத்தில் “பகிரப்பட்ட செழுமைக்கான நீர்” என்ற கருப்பொருளில் ஓர் அறிக்கையைச் சமர்ப்பிப்பார், மேலும் ஜனாதிபதி விடோடோ உட்பட பல இருதரப்பு சந்திப்புகளில் ஈடுபடுவார் என்றும் ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## விஜயதாசவுக்கு எதிரான தடையுத்தரவு மனு...

எவ்வாறாயினும், இந்த முறைப்பாட்டைத் திருத்துவதற்கும், அது தொடர்பான தடை உத்தரவுக்கான உண்மைகளை உறுதிப்படுத்துவதற்கும் மனுதாரருக்கு அவகாசம் உள்ளது என நீதியரசர் சந்துன் விதான தனது உத்தரவை அறிவிக்கும் போதே மேலும் தெரிவித்தார்.

கட்சியின் பதில் தவிசாளராகவிஜயதாசவையும் பதில் செயலாளராக கீர்த்தி உடவத்தவையும் நியமிப்பதற்குக் கடந்த 12ஆம் திகதி நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில்,



தடுக்கும் தடை உத்தரவு பிறப்பிக்க மறுக்கப்பட்டுவிட்டது. அதன் அமைப்புகள் மற்றும் அதிகாரிகள் செயல்படுவர் என்றும் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முறைப்பாட்டாளரான துமிந்த திஸாநாயக்க மற்றும் கட்சியின் தலைவர் நிமல் சிறிபால சில்வா ஆகியோரின் செயற்பாடுகளில் தலையிடுவதைத் தடுக்கும் வகையில் தடை உத்தரவு பிறப்பிக்குமாறும் முறைப்பாட்டாளரால் கோரப்பட்டுள்ளது.

## மைத்திரிக்கு எதிராக இலஞ்ச வழக்கு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மைத்திரிபால சிறிசேன விற்றதாக அவர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். பெறப்பட்ட முன்பணத்துடன் ஈஸ்டர் தின குண்டுத்தாக்குதல்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, குறித்த பணம் எவ்வாறு சம்பாதிக்கப்பட்டது என்பது தொடர்பில் விசாரணை நடத்துமாறு அக்கடிதத்தில் கோரியுள்ளார்.

## மே 18 தமிழ்த் தேசிய துக்க தினம்
### அனுஷ்டிக்குமாறு அழைப்பு

எஸ்.தில்லைநாதன்

தமிழ் மக்கள் மிகக் கொடூரமாகக் கொன்று அழிக்கப்பட்டு 15 ஆண்டுகள் நிறைவுறுகின்ற வலி சுமந்த நாட்களை நினைவு கூருகின்ற இந்த தருணத்தில் தமிழராகிய எம் ஒட்டுமொத்த ஆன்மாவையும் பாதித்த மே. 18 ஐ தமிழ்த் தேசிய துக்க நாளாக நாம் அனைவரும் கடைப்பிடிப்போம் என ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் தலைமை ஒருங்கிணைப்பாளர் தவத்திரு. அகத்தியர் அடிகளார் கோரிக்கை விடுத்தார்.

இது தொடர்பில் ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு விடுத்துள்ள ஊடக அறிக்கையில், வட மாகாண சபையால் இத்தீர்மானம் ஏற்கெனவே எடுக்கப்பட்டுள்ள நிலையில் இதனை உணர்வுப்பூர்வமாகத் தமிழர் தாயகமெங்கும் அனுஷ்டிக்கத் தமிழ்த் தேசிய சக்திகளோடு கலந்தாலோசித்து ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு அழைப்பு விடுக்கின்றது. அன்றைய தினம் (மே 18) அனைத்து தமிழர் வணிக வளாகங்கள் பொது இடங்களில் கறுப்புக்கொடிகளை பறக்கவிடுமாறும் கறுப்புப் பட்டியுடன் கடமைகளில் ஈடுமாறும் கோருகின்றோம்.

மேலதிக தனியார் கல்வி நடவடிக்கைகள் அனைத்தையும் அன்றைய தினம் முழுமையாக நிறுத்தி எம் வலிகளை வெளிப்படுத்துவோம்.

பல்கலைக்கழக மாணவர் எற்பாடு செயதுள்ள இந்த காலப்பகுதிக்கான இரத்ததான முகாம்களில் பங்கேற்போம் அத்துடன், வலி சுமந்த குடும்பங்களுக்கு மனரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் ஆறுதல் அளிப்போம் என்றும் கோரியுள்ளனர்.

இந்த தமிழ்த்தேசிய துக்க நாளில் ஒட்டுமொத்த தமிழராய் நிலத்திலும் புலத்திலும் எம் உச்சபட்ச ஆத்மார்த்த உணர்வை அமைதியாக உறுதியாக வெளிக்காட்டுவோம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.



## மன்னாரில் நினைவுக் கஞ்சி

உறவினர்களால் இணைந்து மன்னார் பேருந்து தரிப்பிடத்தில் முள்ளி வாய்க்கால் கஞ்சி மக்களுக்கு வழங்கப்பட்டது.

இதன் போது, பொதுமக்கள், அருட்தந்தையர்கள் ,இளைஞர்கள், யுவதிகள் உட்பட அதிகளவான மக்கள் கலந்து கொண்டு உணர்வுப்பூர்வமாக முள்ளிவாய்க்கால் கஞ்சியை அருந்திச் சென்றனர்.



## “தேயிலையை அழிக்காதே; கோப்பியை பயிரிடாதே”



தோட்ட நிர்வாகத்தின் இந்த செயற்பாட்டினால் அந்த தோட்டத்தில் தேயிலை தொழிலை நம்பியுள்ள தொழிலாளர்களின் நாளாந்த தொழிலுக்குப் பாதிப்பு ஏற்படுவதோடு, எதிர்காலமும் பாதிக்கப்பட வாய்ப்புள்ளதாகத் தொழிலாளர்கள் சுட்டிக்காட்டினர்.

இந்த நிலையில் இந்த விடயம் குறித்து தோட்டத் தொழிற்சங்க தலைவர்கள் பலமுறை தோட்ட நிர்வாகத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்து, பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்த போதிலும் தோட்ட நிர்வாகம் கோப்பி பயிரிடுவதை மாத்திரம் நோக்காகக் கொண்டுள்ளது.

எனவே, தேயிலையை அழித்துவிட இடமளிக்கப் போவதில்லை என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

அத்துடன், தோட்ட நிர்வாகம் குறித்த தோட்டத்தின் (05) ஆம் இலக்க தேயிலை மலையில் கோப்பியைப் பயிரிடத் தேயிலையை அழிக்க இயந்திரங்களைப் பாவிப்பதைத் தடுக்க முயன்ற தோட்ட தலைவர்கள் உள்ளிட்ட சிலரை பணிநீக்கம் செய்துள்ளதையும் தொழிலாளர்கள் கண்டித்துள்ளனர்.

இந்நிலையில், உடரதல்ல தோட்டத்தில் தலைதூக்கியுள்ள இந்த பிரச்சினை தொடர்பில் நுவரெலியா உதவி தொழில் ஆணையாளர் திணைக்களத்தில் புதன்கிழமை (15) பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

அதில், தொழிற்சங்கங்கள், தோட்ட நிர்வாகம், தொழிலாளர்கள் பங்கேற்றிருந்தனர் எனினும், அந்தப் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்துள்ளது.

இதனையடுத்தே, உடரதல்ல தோட்டத் தொழிலாளர்கள் நானுஓயா நகரில் ஒன்று கூடி தமது கோரிக்கையை முன் வைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

எனவே, உடரதல்ல தோட்டத்தில் தேயிலையை ஒழிக்க இடமளிக்கப்போவதில்லை என தெரிவித்த தொழிலாளர்கள் உரியத் தீர்வு கிட்டும் வரை போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை என்றும் மேலும் தெரிவித்தனர்.

ரஷ்ய– உக்ரேன் போரில் ஈடுபட்டுள்ள

# இலங்கையர் தொடர்பில் ஆராய விரையும் விசேட குழு

ரஷ்ய - உக்ரேன் போரில் ஈடுபட்டுள்ள இலங்கையர்கள் தொடர்பில் ஆராய்வதற்காக விசேட தூதுக் குழுவொன்றை ரஷ்யாவிற்கு அனுப்புமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளதாக வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய தெரிவித்துள்ள்ளார்.

அதற்கமைய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், முன்னாள் ரஷ்யாவின் தூதுவர் மற்றும் வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் அடங்கிய குழுவொன்று உடனடியாக ரஷ்யாவிற்கு அனுப்பப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் வியாழக்கிழமை (16) நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அமைச்சர் தாரக பாலசூரிய இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது,

தற்போது வெளிவிவகார அமைச்சும் பாதுகாப்பு அமைச்சும் இணைந்து ரஷ்ய உக்ரேன் போரில் பங்கெடுத்திருக்கும் இலங்கையர்களின் கணக்கெடுப்பை நடத்தி வருகின்றன. சுற்றுலா விசாவில் இலங்கையர்கள் சிலர் ரஷ்யாவுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

மேலும், அவர்களில் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் முப்படைகளிலிருந்து ஓய்வு பெற்ற



வீரர்கள். ரஷ்யாவிற்கு எத்தனை பேர் சென்றிருக்கிறார்கள் என்ற கேள்விதான் தற்போதைய பிரச்சினையாக காணப்படுகிறது. உறுதிப்படுத்தப்படாத தகவல்களின் படி, ரஷ்யாவில் 600 மற்றும் 800 வரையிலானவர்கள் அல்லது அதற்கு அதிகமானவர்கள் சென்றிருக்கலாம் என்று கூறப்படுகிறது.

எவ்வாறாயினும், அரசாங்கம் என்ற வகையில், ரஷ்யாவில் இருக்கும் இலங்கையின் ஓய்வுபெற்ற இராணுவ உறுப்பினர்கள் தொடர்பான அனைத்து நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது. ரஷ்யாவில் போரில் பங்கேற்றிருப்பது தொடர்பில் தகவல் வெளிப்படுத்திய ஊடகங்களுக்கு நன்றி. ரஷ்யாவில் இவர்கள் தங்கியிருக்கும் பிரதேசம் தொடர்பில் அறிய முடியாமல் இருப்பதே தற்போதைய சிக்கலாகும்.

ரஷ்ய குடியுரிமை வழங்குவது போன்ற பொய்யான வாக்குறுதிகளை வழங்கி ஆள் கடத்தல்காரர்கள் இவர்களை ரஷ்யாவிற்கு அழைத்துச் சென்றுள்ளதாக அறிய கிடைத்துள்ளது. இந்த ஆள்கடத்தல் செயற்பாடுகளில் இராணுவ உயர் அதிகாரியொருவருக்கும் தொடர்பு இருப்பதாக தெரியவந்திருக்கிறது.

எவ்வாறாயினும், ரஷ்யாவிற்கு ஆட்களை அனுப்புவது நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். உண்மை நிலைமையை அவர்களுக்குச் சொல்ல வேண்டும். பின்னர், இராஜதந்திர மட்டத்தில் கலந்துரையாடி அங்கு சென்றுள்ளவர்களை இலங்கைக்கு அழைத்து வர முடியும் என நம்புகிறோம். அரசாங்கம் அதற்காக முழுமையாக அர்பணிக்கும்.

வெளிவிவகார அமைச்சர் வெளிநாடு சென்றிருக்கும் நிலையிலும், ரஷ்ய - உக்ரேன் போரில் பங்கெடுத்திருக்கும் இலங்கையர்கள் குறித்து ஆராய்வதற்கான விஷேட தூதுக்குழுவொன்றை ரஷ்யாவுக்கு அனுப்புமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

இதன்படி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், முன்னாள் ரஷ்ய தூதுவர், வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் அடங்கிய குழுவொன்று ரஷ்யாவுக்கு அனுப்பப்படவுள்ளது. இது குறித்து ரஷ்ய தூதரகத்துக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும்" என்றும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

விமான நிலையத்திற்கு சென்ற இராஜாங்க

# அமைச்சரால் சர்ச்சை



கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு சென்ற இராஜாங்க அமைச்சர் ஒருவர் பயணிகளின் பயணப் பொதிகளை கொண்டு செல்லும் ஊழியர் ஒருவரை (போர்ட்டர்) கன்னத்தில் அறைந்து, பாதுகாப்பு அதிகாரிகளையும் அச்சுறுத்தியதாக விமான நிலைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளது.

இந்த இராஜாங்க அமைச்சரின் மனைவி உட்பட சிலர் வெளிநாட்டு பயணமொன்றுக்காக புதன்கிழமை (15) அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்திற்குச் சென்றுள்ளார்.

இராஜாங்க அமைச்சர் தனது பாதுகாவலர்களுடன் நுழைவுச்சீட்டு வாங்காமல் பிரதான நுழைவாயில் ஊடாக விமான நிலையத்திற்குள் பிரவேசிக்க முயற்சித்துள்ளார்.

அவரின் பாதுகாவலர்கள் துப்பாக்கியுடன் இருந்ததால் அவை கொண்டு செல்ல அனுமதிக்க முடியாது என விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகள் இராஜாங்க அமைச்சரிடம் தெரிவித்துள்ளனர்.

அப்போது, அவர் பாதுகாப்பு அதிகாரிகளை திட்டி, அவர்களைத் தனது கைத்தொலைபேசியால் புகைப்படமாகவும் பதிவு செய்து கொண்டுள்ளதாக விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பின்னர், குறித்த இராஜாங்க அமைச்சருடன் வந்தவர்களின் பயணப் பொதிகளை விமான நிலையத்திற்கு எடுத்துச் செல்வதற்காக வந்த போர்ட்டருக்கு குறைந்த பணத்தை வழங்கியுள்ளதுடன், அவர் உரியக் கட்டணத்தைக் கேட்டபோது, ஆத்திரமடைந்த இராஜாங்க அமைச்சர், தனது காலணியால் போர்ட்டரின் காலை மிதித்து, கன்னத்தில் அறைந்து பாதுகாவலர்களுடன் வெளியேறியதாக விமான நிலைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தாக்குதலுக்கு ள்ளானதாகக் கூறப்படும் போர்ட்டர், தேவையில்லாத பிரச்சினையை ஏற்படுத்திவிடும் என்ற அச்சத்தில் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யவில்லை என தெரியவந்துள்ளது.

அரசியல்வாதியின் இந்த செயல் தற்போது பகிரங்கமான ரகசியமாக மாறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.







# யாழ். பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் போராட்டம்

■ நிதர்ஷன் வினோத்


யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் கவனயீர்ப்பு போராட்டமொன்றை வியாழக்கிழமை(16) முன்னெடுத்தனர்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் ஒன்றுகூடிய பல்கலைக்கழக ஊழியர்கள் குறித்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதுடன் குறித்த போராட்டம் திருநெல்வேலி சந்திவரை பேரணியாக சென்று பல்கலைக்கழகத்தை மீண்டும் அடைந்தது.

நாடு முழுவதிலுமுள்ள அரச பல்கலைக்கழகங்களில் நடைபெற்றுவரும் தொடர்ச்சியான வேலைநிறுத்தத்தின் ஒரு பகுதியாக அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும், கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடாத்தப்பட்டு வருகிறது.

அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்க சம்மேளனம், “பல்கலைக்கழக கல்விசாராப் பணியாளர்களின் சம்பள முரண்பாடு, சம்பள அதிகரிப்பு மற்றும் அவர்களைப் பாதிக்கும் பிரச்சினைகளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் அரசாங்கமும் தொடர்ந்து ஏமாற்றி வருகின்றமைக்கு” எதிர்ப்புத் தெரிவித்தே போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

# புதிய கட்டிட திறப்பு விழா



■ எம்.யூ.எம்.சனூன்

மதுரங்குளி - கனமூலை, தாருஸ்ஸலாம் வைத்திய நிலையத்தின் புதிய கட்டட திறப்பு விழா தாருஸ்ஸலாம் வைத்திய நிலையத்தின் தலைவர் அஷ்ஷெய்க் எச்.எச்.எம்.நஜீம் (ஷர்கி) தலைமையில் சனிக்கிழமை (18) காலை 9 மணிக்கு வைபவ ரீதியாக திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில், பிரதம அதிதியாக முஸ்லிம் ஹேண்ட்ஸ் (Muslim Hands) அமைப்பின் இலங்கைக்கான பணிப்பாளர் ஏ.எம்.மிஹ்ழார், கௌரவ அதிதிகளாக ஐக்கிய அரபு அமீரகத்திலிருந்து முகம்மது அப்துல்லா அஹ்மத் பாரிஸ், அஷ்ஷெய்க் இஸட்.பீ.எம்.அப்துல் ரஹ்மான் உட்பட புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், முன்னாள் கற்பிட்டி பிரதேச சபை தலைவர் மற்றும் கற்பிட்டி பிரதேச சபை முன்னாள் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து சிறப்பிக்க உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாயமான சா/தரப் பரீட்சார்த்திகளான இரண்டு மாணவிகள் மீட்பு

கல்விப் பொதுத் தராதரப் பரீட்சைக்குத் தோற்றிய நிலையில், மாயமான பரீட்சார்த்திகளான மாணவிகள் இருவர், உறவினர்களின் வீட்டிலில் இருந்து மீட்கப்பட்டுள்ளனர்.

இவ்விரு மாணவிகளும், செவ்வாய்க்கிழமை(14) பரீட்சைக்கு சென்றிருந்த நிலையில், கடுவெலவில் உள்ள உறவினர்களின் வீட்டில் இருந்தனர் என புதன்கிழமை (15) இரவு கினிகத்ஹேன பொலிஸ் நிலையத்துக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

வேலையை வாய்ப்பை தேடி இவ்விருவரும் கொழும்புக்கு சென்றனர் என்றும் கடுவெல பிரதேசத்தில் உள்ள உறவினரின் வீட்டுக்கு புதன்கிழமை (15) இரவு சென்றுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடுவெல பிரதேசத்தில் இருந்து பாடசாலை மாணவர்கள் இருவரும் அவர்களின் உறவினர்களினால் கினிகத்ஹேன பொலிஸ் நிலையத்துக்கு வியாழக்கிழமை (16) அழைத்துவரப்பட்டனர். அவ்விரு சிறுமிகளும் அறிவுறுத்தப்பட்டனர் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

# பேருந்தைச் செலுத்திய சாரதி மாரடைப்பில் மரணம்

■ சுஜிதா, கௌசல்யா, ஆ.ரமேஸ்,

லிந்துலை பொலிஸ் பிரிவில் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்து சாரதியொருவர் தான் செலுத்திச் சென்ற பேருந்தில் மாரடைப்பு ஏற்பட்டு புதன்கிழமை(15) உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் நுவரெலியா பிரதான பேருந்து தரிப்பு நிலையத்திலிருந்து மாலை 03.10 மணியளவில் புறப்பட்டு தலவாக்கலை ஊடாக பத்தனை சந்தி வழியாக நாவலப்பிட்டி நோக்கிப் பயணிக்கும் பேருந்தின் சாரதியே இவ்வாறு உயிரிழந்ததாக ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்த சாரதி இ.போ.சபைக்குச் சொந்தமான நாவலப்பிட்டி டிப்போவில் பணியாற்றும் இரண்டு பிள்ளைகளில் தந்தையான ஆரத்தனகே (வயது 41) என்பவராவார்.




சாரதியின் உடல் பிரேதப் பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதாக லிந்துலை பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.





# மாபெரும் ஆர்ப்பாட்டம் பேரணி

■ உமாமகேஸ்வரி

இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள அப்பாவி தோட்ட மக்களை அவ்வப்போது பல்வேறு காரணங்களுக்காகத் தோட்ட நிர்வாகம் உள்ளிட்ட வெளியார் தாக்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, இரத்தினபுரி நகரிலுள்ள மணிக்கூட்டுக் கோபுரத்திற்கருகில் வியாழக்கிழமை (16) காலை 10.00 மணி முதல் மாபெரும் ஆர்ப்பாட்டம் பேரணியொன்று இடம்பெற்றுள்ளது.


மலையக சிவில் உரிமைக்கான இயக்கம் ஏற்பாடு செய்த இந்த ஆர்ப்பாட்டத்தில், இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள சிவில் அமைப்புக்கள் மற்றும் தொழிற்சங்க மற்றும் அரசியல் பேதமின்றி தோட்டத் தொழிலாளர்கள், தொழிற்சங்கவாதிகள் மற்றும் அரசியல்வாதிகள் உள்ளிட்ட நூற்றுக்கு மேற்பட்டவர்கள் கலந்துகொண்டுள்ளனர்.

இரத்தினபுரி தும்பரை 82ஆவது தோட்டத்தில் அண்மையில் தோட்ட நிர்வாகத்தினர் கடமைக்கு வர மறுத்த பெண் தோட்டத் தொழிலாளி ஒருவரைக் கடுமையாகத் தாக்கியதில் அவர் படுகாயமடைந்து இரத்தினபுரி பொது வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வீடு திரும்பி இருந்தார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து கோசமிட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் இது போன்ற விடயங்களுக்கு பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் மலையக மக்கள் இந்நாட்டின் அடிமைகள் இல்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

# பீடி இலைகள் மீட்பு

■ ரஸீன் ரஸ்மின்



கற்பிட்டி - இப்பந்தீவு கடற்பிரதேசத்தில் மிதந்து கொண்டிருந்த நிலையில், ஒரு தொகை பீடி இலைகள் வியாழக்கிழமை (15) கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த சம்பவத்தில் எவரும் கைது செய்யப்படவில்லை என கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

வடமேற்கு கடற்படை கட்டளையின் கற்பிட்டி - உச்சமுனை கடற்படையினரால் இப்பந்தீவு கடல் பிரதேசத்தில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட போதே குறித்த பீடி இலைகள் பொதியிடப்பட்ட உர மூடைகள் கடலில் மிதந்துகொண்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளன. 11 உர மூடைகளில் அடைக்கப்பட்ட 338 கிலோ கிராம் பீடி இலைகள் இருந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

# மக்களின் உரிமைகளை காலில் போட்டு மிதிக்கும் பிரதிநிதிகள்

பாராளுமன்ற உறுப்பினர்கள் அவ்வப்போது பேசும் பொருளாக மாறிவிடுகின்றனர். கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்குள் நுழைவுச்சீட்டை பெற்றுக்கொள்ளாது, தன்னுடைய கைத்துப்பாக்கியுடன் சென்றிருந்த பாராளுமன்ற உறுப்பினர், அங்குப் பேயாட்டம் ஆடியதாகச் செய்திகள் வெளியாகின. அவர், இராஜாங்க அமைச்சர் ஒருவர் என்றும் அறியமுடிகின்றது.

சட்டவிரோதமான மணல் அகழ்வில் ஈடுபடல், மதுபானசாலைகளை திறப்பதற்கான அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளல், தரகு பயணங்களைப் பெறல் இவற்றுக்கு அப்பால், தரம் குறைந்த மருந்துகளை இறக்குமதிச் செய்தல், இவ்வாறு முறைகேடான சம்பவங்கள் தொடர்பிலான பட்டியலை அடுக்கிக்கொண்டே போகலாம்.

இவற்றுக்கு இடையில், பாராளுமன்றத்தில் நல்ல மற்றும் கெட்ட தலைப்புகள் குறித்து மக்களால் கேள்வி எழுப்பப்பட்டாலும், பெரும்பாலான சந்தர்ப்பங்களில், நல்ல தலைப்புகளை விட மோசமான தலைப்புகள் அதிகமாக இருப்பதைக் காணலாம். சபை கூடும் நாளொன்றுக்கான செலவையும், அதில் பேசப்படும் விடயங்களை பார்க்குமிடத்து, இன்று ஏன்? பாராளுமன்றம் கூடப்பட்டது. மக்களின் வரிப்பணமே செலவாகின்றது என்று பலரும் கூறுவதைக் கேள்விப்பட்டிருக்கின்றோம்.

சபை கூடும் போது, வாய்மூல விடைக்கான வினாக்கள் நேரத்தில், கேள்விகளைக் கேட்டிருக்கும் எம்.பிக்களில் பலர் சபையில் பிரசன்னமாய் இருப்பதில்லை. இல்லையேல், விடயதானத்துக்கு பொறுப்பான அமைச்சர் பதிலளிப்பதற்குச் சபைக்கு சமூகமளிக்காமல் இருப்பர். அதுமட்டுமன்றி, கால அவகாசமும் கேட்கப்படும் இவையெல்லாமே வரிப்பணத்தை வீணாக்கும் செயற்பாடாகும்.

தமக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தாமல் எம்.பிக்கள் தமக்கு அதிகாரத்தை வழங்கிய மக்களின் உரிமைகளைக் காலில் போட்டு மிதிக்கின்றார்கள் என்பது சுட்டிக்காட்டத்தக்கது. மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் தமது பொறுப்பைப் புறக்கணிப்பது என்பதை எம்.பிக்கள் உணரவில்லையா?


இந்த நாட்டின் பாராளுமன்றம் தொடர்பான மிகக் கடுமையான விமர்சனம் கடந்த போராட்டத்தின் மூலம் வந்ததை இங்கு நினைவுபடுத்துவது அவசியமாகும். பாராளுமன்றத்தில் உள்ள 225 உறுப்பினர்களையும் வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்பது பலமான கருத்து எழுந்தது.

பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் பொறுப்பைப் புறக்கணித்து விட்டார்கள் என்று மக்களின் கோபமும் விரக்தியும் வெடித்த காலம் அது. இந்த கோரிக்கையின் சத்தம் பொதுவெளியில் கேட்காத போதும், சபை நடவடிக்கைகளில் நம்பிக்கையை இழந்தவர்கள் தங்களுக்குள்ளே முணுமுணுத் துக்கொண்டிருக்கின்றனர்.

நாட்டு மக்களுக்கான கடமைகளையும் கடமைகளையும் நிறைவேற்றுவதில் இடையூறுகள் மற்றும் இடையூறுகளைத் தவிர்ப்பதற்காகவே பாராளுமன்ற உறுப்பினர்களுக்குச் சிறப்புரிமைகள் வழங்கப்படுவதுடன், பொறுப்புக்களைப் புறக்கணிப்பதற்காகப் பயன்படுத்தப்படுவதைக் குறிப்பிட வேண்டும்.

இந்நிலையில், பாராளுமன்ற உறுப்பினர்களில் பலர் தங்களுடைய காப்புறுதியில் குடும்பத்தினரையும் இணைத்துக்கொள்வதற்குக் கடுமையான பிராயச்சித்தம் செய்கின்றனர். அந்த கோரிக்கையை விடுக்காதவர்களுக்கு அந்த காப்புறுதி கிடைக்காது என்றில்லை. அத்துடன், எம்.பிக்கள் வாகன அனுமதிச் சீட்டு பெறுவதில் உள்ள ஆர்வத்தில் சிறிது கூட பொதுமக்கள் சார்பில் கேள்வி கேட்கப் பயன்படுத்தாமல் இருப்பது வெட்கக்கேடாகும்.



## கறுப்பு யூலையின் நாற்பதாண்டுகளின் பின் 52

# இருண்ட நினைவுகளில் கற்காத பாடங்கள்



தெ.ஞாலசீர்த்தி மீநிலங்கோ

போர் முடிந்து பதினைந்து ஆண்டுகளாகின்றன. இன முரண்பாட்டைப் போராக்கிய கறுப்பு யூலை நிகழ்ந்து நாற்பதாண்டுகள் நிறைவடைந்துள்ளன. 1983 இனவன்முறை தந்த அனுபவங்கள், சொல்லிய செய்திகள், உணர்த்திய உண்மைகளின் வழி நாம் எதையாவது கற்றுக் கொண்டோமா என்ற கேள்வி தவிர்க்கவியலாதது.

இந்தக் கேள்வியோடு இந்தத் தொடரை நிறைவுசெய்வது பொருத்தம். கறுப்பு யூலையின் வரலாற்று முக்கியத்துவம் தமிழர் என்றுமே மறக்க இயலாதது.

1983இல் அரங்கேறிய இனவாதக் கொடுமைகள் ஒரே நாளில் உருவானதல்ல. அதற்கு ஒரு பின்னணியுள்ளது.
அது பற்றிய ஆழமான ஆய்வு தமிழ்ச் சூழலில் நடைபெற்றது குறைவு. அதற்கான அரசியல் விவாதக் களம் தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் இருக்கவில்லை.

தேசிய இனப்பிரச்சினையை 1956 சிங்கள மொழிச் சட்டத்திலிருந்து தொடங்குகிற ஒரு மரபுக்கு நாம் பழக்கப்பட்டுள்ளோம். ஐக்கிய தேசியக் கட்சி தமிழின் நண்பன், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியே பேரினவாதக் கட்சி என்று இன்றும் நம்புவோர் இருக்கிறார்.

எமது வரலாறு புனைவுகளால் கட்டமைக்கப்பட்டது. உண்மைகளைக் கேட்கவோ, விமர்சனங்களை ஏற்கவோ நாம் என்றுமே தயாராக இருந்ததில்லை. இதுதான் 2009இல் மாபெரும் பேரழிவுக்கு வழிகோலியது.

1983 வன்முறையை இன்னமும் கலவரம் என்று அழைப்போர் இருக்கிறார்கள். தமிழில் "ஆடிக் கலவரம்" என்று அழைக்கப்படுகிறது. தமிழரின் அரசியல் ஞானசூனியத் தனத்துக்கு இதுவொரு நல்ல சான்று. 1983 வன்முறை திட்டமிட்டு அரசின் ஆதரவுடன், வழிகாட்டப்பட்டு அரங்கேறிய நிகழ்வாகும். ஆனால், அதை ஒடுக்குமுறையாளர்கள் வெறும் கலவரமாகச் சுருக்கையில் நாமும் அதைக் கலவரம் என்றே அழைத்தோம், அழைக்கிறோம். இவ்வன்முறை நிகழ்ந்து ஓராண்டுக்குள்ளேயே ஆங்கில கல்விப்புல இதழுக்கு இச்சம்பவம் பற்றி கட்டுரையொன்றைத் தோழர் நா.சண்முகதாசன் எழுதினார். அதற்கு அவர் கொடுத்த தலைப்பு "Sri Lanka: Story of a uolocaust" குறித்த uolocaust என்ற சொற்பிரயோகம் மிகவும் வலிமையானது.

இரண்டாம் உலகப்போரில் நாஜிகள் யூதர்களுக்கு இழைத்ததையே இச்சொல்லால் அழைப்பர். அவ்வகையில் சண்முகதாசன் இதை சரியாக இனங்கண்டார். ஆனால், தமிழ்த் தேசியவாதத் தலைமைகள் இதை அவ்வாறு காணவில்லை. ஏன் அவ்வாறு காணவில்லை. யாழ்ப்பாண மைய வாத சிந்தனைமுறை இதற்குப் பங்களித்தாக போன்ற வினாக்கள் வினவப்படவுமில்லை, விடையளிக்கப்படவுமில்லை.

2009இல் நிகழ்ந்ததை இனப்படுகொலை என நிறுவச் சர்வதேச அரங்குகளில் தலைகீழாக நின்றபோது இன்றுவரை அது சாத்தியமாகவில்லை. இலங்கையில் தமிழர்களுக்கு நிகழ்த்தப்பட்டது தொடர்ச்சியான வன்முறை, அதன் இன்னொரு கட்டமே 2009 என்ற முறையியல் தர்க்கத்தில் அமைந்த வாதங்கள் முன்வைக்கப்படுதல் குறைவு. பலருக்கு விடுதலைப் புலிகளை விலக்கிய சிந்தனை முறை சாத்தியமில்லை. இந்தக் கோளாறு தமிழரின் உரிமைக் கோரிக்கைகளைச் சிதைப்பதில் பங்களித்துள்ளது என்பதை மறுப்பதற்கில்லை.

1983இன் வன்முறையால் நேரடியாகப் பாதிக்கப்பட்டோர் மட்டுமன்றி, பிற தமிழர்களும் தடையின்றி மேற்கு நாடுகளிற் தஞ்சம் புக இயலுமாயிற்று.

1983 நிகழ்வுகள் இலங்கையின் அயலுறவில் ஏற்படுத்திய பாதிப்புகள் பெரிது. 1977இல் ஆட்சிக்கு வந்தது முதலாக இலங்கையின் பொருளாதாரத்தைச் சர்வதேச ஏகபோகத்திடம் சரண் புகுவித்த ஜெயவர்தன அரசாங்கம் இலங்கையின் அயற் கொள்கையை முற்றாக அமெரிக்கச் சார்பானதாக்கியது. இந்தியாவின் நலன்கட்கும் பிராந்திய மேலாதிக்க நோக்கங்கட்கும் அது கேடாக அமைந்தது. எனவே, 1983 தமிழர் விரோத வன்முறையையும் அதனால் விளைந்த அகதிகள் பிரச்சினையையும் காரணமாக்க இந்தியா ஒரு புறம் இலங்கைக்கு இராஜதந்திர நெருக்குவாரங்களைக் கொடுத்ததுடன், இன்னொரு புறம் தனது உளவு நிறுவனமான "NWH" மூலமும் பிற முகவர்கள் மூலமும் தமிழ் இளைஞர் இயக்கங்கட்கு நிதியுதவியும் ஆயுதப் பயிற்சியும் வழங்கியது. இந்தியாவின் பிராந்திய விஸ்தரிப்புக் கொள்கைக்கு உடன்பாடான இயக்கங்கள் சிறப்பான கவனிப்பைப் பெற்றன.


1983இல் இலங்கை மீதான சர்வதேசத்தின் அக்கறைகள், தமிழர் என்ற ஒரு சிறுபான்மை தேசிய இனத்தின் இருப்பையும் நிலைப்பையும் காப்பது பற்றியதென என்பதே தமிழர் விளங்கிக் கொண்டார்கள். அவ்வாறு தமிழ்த் தலைமைகள் தமிழருக்குத் தொடர்ந்து சொல்லி வந்தன. ஆனால், சர்வதேசத்தின் அக்கறை தமிழர்களின் மீதானதல்ல என்று நமக்கு விளங்க நீண்டகாலம் எடுத்தது. அதைக் கடந்த நாற்பதாண்டுக் கால அரசியலும் குறிப்பாகப் போரின் பின்னரான 15 ஆண்டுகால அரசியல் அபத்தங்களும் நிருபித்துள்ளன.

ஜெயவர்த்தன அரசாங்கம் சர்வதேச சமூகத்துடன் நெருக்கமாக இருந்தது. குறிப்பாக 1977இல் இலங்கை சர்வதேச வர்த்தகத்திற்கு திறக்கப்பட்டமையானது இந்த நெருக்கத்தை இன்னமும் அதிகரித்தது. இக்காலப்பகுதியில் சிறுபான்மையினர் மீதான வெறுப்பு, வன்முறை என்பன நடைபெற்றன. இவை யாவும் சர்வதேச சமூகம் குறிப்பாக இலங்கையில் தங்களது முதலீட்டைப் பெருக்கவும் இலங்கையை உலகமயமாதல் சுழிக்குள் இழுக்கவும் தீவிரமாகச் செயற்பட்ட அமெரிக்காவும் அதன் கூட்டாளி நாடுகளும் அறியாதவை அல்ல. அவர்களது ஆதரவும் ஊக்குவிப்பும் இல்லாமல் 1983 வன்முறையை நோக்கிய நகர்வுக்கு இடமில்லை. ஏனெனில், தேசிய இனப் பிரச்சினையின் தீர்வு தங்களது பொருளாதார, இராணுவ மேலாதிக்க நோக்கங்களுக்குத் தேவை என்று அவை எண்ணியிருந்தால், இலங்கை அரசாங்கத்தின் மீது எப்போதே சில நெருக்குவாரங்களைப் பிரயோகித்திருக்க இயலும். ஆனால், அது நிகழவில்லை. தாங்கள் ஆதரவு கொடுத்த ஆட்சியில் ஏற்பட்ட கொடிய வன்முறை சில வெளிநாட்டு ஊடகங்களின் வழி உலகுக்குத் தெரிவிக்கப்பட்டமையானது, அவர்களுக்குச் சங்கடத்தைக் கொடுத்தது.

இதனாலும் தமிழ் அகதிகளுக்குத் தடையின்றி பல நாட்டுக்குள் புக இயலுமாயிற்று. இலங்கையில் வன்முறைகள் புதிதல்ல. ஆனால், 1983 புதிய கட்டத்திற்கு அரச வன்முறைகளை நகர்த்தியது. இது எப்படி நடந்தது? பௌத்த மதக் கொள்கைகளான இரக்கம், அகிம்சை, கொல்லாமை ஆகியவற்றை மையப்படுத்திய ஒரு பெரும்பான்மை மக்கள் கூட்டம் எவ்வாறு இவ்வகைப்பட்ட கூட்டுக் கொலைகளில் பங்காளிகளாக ஆகினார்கள்? தங்களுக்குத் தெரியாத நபர்களுக்கு எதிராக அர்த்தமற்ற கொலைகளில் ஈடுபடுவது எப்படி சாத்தியம்? அவர்கள் இன்னொரு இனத்தைச் சேர்ந்தவர்கள் வேறு மொழி பேசுகிறார்கள் என்பதைத் தவிர, அவர்கள் மீது இவர்களுக்கு எந்தக் குறையும் இல்லை. தேசியவாதம் எவ்வாறு இனவெறியைத் தூண்டுகிறது என்பதற்கு இது நல்லதொரு எடுத்துக்காட்டு.

1983இல் அதைத் தொடர்ந்த நிகழ்வுகளும் தந்த அனுபவங்களில் இருந்து இனியாவது நாம் பாடம் கற்க முயலவேண்டும். உண்மைகள் தாமாக வந்தடைவதில்லை. வந்தாலும் அவை எப்போதுமே உண்மைகளாக அடையாளம் காணப்படுவதில்லை. எவ்வாறாயினும், சுதந்திரமான சிந்தனையும் பகுத்தறிவு ஆற்றலும் உண்மைகளை அடையாளம் காண உதவுகின்றன. அதேவேளை, உண்மைகளை அறிய முடியாமல் மறிக்கிற மனத்தடைகள் உள்ளன. பட்டறிவு அந்தத் தடைகளை ஓரளவுக்கேனும் தகர்க்கிறது. எனினும், உண்மைகளை மக்கள் அறியக் கூடாது என்பதில் கவனமாக உள்ளவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் உண்மைகளை மக்களிடமிருந்து மறைக்கிறார்கள். மறைக்க இயலாதபோது திரிக்கிறார்கள். திரிக்க இயலாதபோது உண்மையினின்று மக்களின் கவனத்தைத் திசை திருப்புகிற விதமான புனைவுகளைப் படர விடுகிறார்கள். இது தமிழ்த்தேசிய அரசியலின் அவலம். இதனால் செய்ய வேண்டிய பணிகளைச் செய்ய இயலாமல் உணர்ச்சிகர திசைதிருப்பலைத் தப்பிப்பிழைப்பதற்கான அரசியலாக இன்று தமிழ்த் தேசியம் கையிலெடுத்துள்ளது.
தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்பதைப் பேரினவாதம் இன்று திட்டவட்டமாக மறுக்கிறது. தமிழரின் அடையாளத்தை இந்த நாட்டுக்குரியதல்ல என்று சொல்லுமளவுக்குப் பேரினவாதம் போயுள்ளது. தமிழர்கள் அந்நியர்கள் அவர்கள் இந்த மண்ணுக்குரியவர்களல்ல என்ற சிந்தனை சிங்கள மக்கள் மத்தியில் வலுவூட்டப்பட்டு வருகிறது. அதை எதிர்கொள்வதற்கான ஆர்வமோ ஆற்றலோ அக்கறையோ கூடத் தமிழ்த் தேசியவாதத் தலைமைகளிடம் இல்லை.
தமிழ்த் தேசியவாதம் எந்த வடிவத்தை எடுத்த போதிலும், அது வலியுறுத்தி வந்த நலன்கள் வசதி படைத்த, சமூகத்தின் மேல் நிலையிலிருந்து வந்தவர்களதும் மேல்நிலையாக்கம் பெற்றவர்களதும் நலன்களே. தமிழ் மக்கள் ஒடுக்கப்பட்ட சனங்கள் என்பதை நமது தலைமைகள் இன்னமும் சரிவர விளங்கிக் கொண்டதாகத் தெரியவில்லை. தமிழ்த் தலைமைகள் பேசுகின்ற இன விடுதலை முழுச் சமூகத்தினதும் விடுதலை அல்ல. தமிழ் மக்கள் நடுவே பண்பாட்டின் பேராலும் மரபின் பேராலும் பெண்கள் மீதும் தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் மீதும் ஆதிக்கமும் அடக்குமுறையும் தொடருகின்றன. அகமுரண்பாடுகளைக் களையத் தவறிய புறமுரண்பாடுகளின் மீது அனைத்துப் பழியையும் போடுகிற சமூகம் விடுதலைக்கு இலாயக்கற்றது.
இத்தொடரின் நிறைவுப்பகுதியை முடிக்கும்போது ஒரேயொரு சிந்தனை மட்டுமே எஞ்சி நிற்கிறது. 1983 என்ற கொலைக்களத்திற்கு நாம் எவ்வாறு வந்தடைந்தோம் என்பதைப் பற்றி நாம் ஆழமாக யோசித்ததில்லை.

1983இன் பாடங்களை நாம் கற்கவில்லை என்பதை அதைத் தொடர்ந்த 26 ஆண்டுக்கால போரின் வரலாறு காட்டிநிற்கிறது. மூன்று தசாப்தகால போரினதும் பேரழிவினதும் பாடங்களைக் கூட நாம் கற்கவில்லை என்பதைப் போரின் பின்னரான 15 ஆண்டுகள் காட்டிநிற்கின்றன. வரலாற்றை யாரும் வழிகாட்டியாக எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. வரலாற்றிலிருந்து பாடமெதனையும் கற்றுக்கொள்ளவில்லை என்பதுதான் நாம் வரலாற்றில் இருந்து கற்றுக்கொள்ளும் பாடம்.



## வாழ்வியல் தரிசனம்

குழப்பத்தை தங்களுக்குள் திணித்துக் கொண்டு சமூகத்தையும் உலகத்தையும் திட்டிக்கொண்டிருப்பவர்கள் மனசாட்சி அற்றவர்கள்.

எதுவுமே செய்யாமல் உடலை வளைத்து கரும மாற்றாமல் கண்டவர்களிடம் கடனைப் பெற்று காலத்தைக் கரைப்பவர்கள், தாங்கள் என்ன செய்கின்றோம் எனப் புரியாமல் இருக்கின்றார்கள்.

தன்னைத் தான் உணர்வதும் தன்னைதான் புடம் போடுவதும் எழுவதற்கான வழி. பலவீனமாக இருக்கும் போது அதுவே நியதி, கட்டளை எனக் கருதுவதும் அநாகரிகமானதும், விபரீதமான வீழ்ச்சிகளையும் தரும்.

மானுட வாழ்வில் எல்லாமே நடக்கும் எதுவுமே புதிது அல்ல. அடுத்த கட்ட வாழ்வு எமக்கானது என தீர்மானமும், திட நம்பிக்கையும் எடுப்பவர்கள் தோல்விகளுக்கு அடிமையாவது இல்லை.

சறுக்கி விழுந்தால் அப்படியே படுக்கமுடியாது. எங்களுக்கு நாங்களே காவலர்கள். அடுத்தவர்களின் இரக்கம், உதவி எத்தனை நாள்களுக்குச் செல்லுபடியாகும். துன்பத்திற்கு அடுத்தது இன்பம்தான்.

– பருத்தியூர் பால– வயிரவநாதன்

## கடிதங்கள்

### வீதிகளை புனரமையுங்கள்

மலையகப் பகுதிகளில் உள்ள பல தோட்டங்களின் உள் வீதிகள் பல தற்போது மோசமான நிலையில் காணப்படுவதாகவும், போக்குவரத்து நடவடிக்கைகளை உரிய முறையில் மேற்கொள்ள முடியாமல் கடும் சிரமங்களை எதிர் நோக்குவதாகவும் தோட்டத் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மழை பெய்யும் போது, குறிப்பிட்ட தோட்ட வீதிகளில் நடந்து கூட செல்ல முடியாத வகையில் பெரிய நீர் ஓடைகள் வீதிகளில் ஓடுவதாகவும், இதனால் தங்களது பல்வேறு அன்றாட தேவைகளை நிறைவேற்றுவதில் பல்வேறு அசௌகரியங்களையும் எதிர்கொள்வதாகக் குறிப்பிடுகின்றனர்.

பழுதடைந்த வீதிகளில் வாகனங்களைச் செலுத்துவதில் சிரமம் காணப்படுவதால் முச்சக்கரவண்டியில் அவசர பயணத்திற்குச் சென்றால் அதற்கு அதிகளவில் பணம் கேட்கின்றனர்.

இதன்காரணமாக மத்திய மலைநாட்டில் உள்ள பெருந்தோட்ட மற்றும் சிறு தோட்டத்தின் உட்பகுதியில் சேதமடைந்துள்ளதால் வீதிகளை உரிய திணைக்களங்கள் விரைவில் சீர் செய்யுமாறு தோட்டத் தொழிலாளர்கள் கோரிக்கை விடுக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

– செ.தி.பெருமாள்

# Eco Ride 2024e-bicycle நிகழ்வுக்கு இலங்கை தயார்



இலங்கையின் பெருமளவு எதிர்பார்ப்புகள் நிறைந்த மின் சைக்கிள் நிகழ்வான *Eco Ride* இம்முறையும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. “பிளாஸ்ரிக்களை நிர்வகிப்பது, இயற்கையை பாதுகாப்பது” எனும் தொனிப்பொருளில் விரைவில் மலைநாட்டில் *Lumala Eco Ride* 2.0 முன்னெடுக்கப்படவுள்ளது.

*Eco Ride* இல் நாடு முழுவதிலுமிருந்து பங்குபற்றுநர்கள் பங்கேற்று, நிலைபேறாண்மை மற்றும் e-போக்குவரத்து தொடர்பில் விழிப்புணர்வு ஏற்படுத்தவுள்ளனர். இதில் கள மட்டத்தில் இயங்கும் சூழல்சார் நிறுவனங்கள், பல்கலைக்கழக மாணவர்கள், கழகங்கள் மற்றும் சம்மேளனங்களின் அங்கத்தவர்கள், மாநகர சபைகள், அமைச்சுகள் மற்றும் சுற்றுலாப் பயணிகள், சைக்கிளோட்ட ஆர்வலர்கள் மற்றும் சமூக ஊடக செயற்பாட்டாளர்கள் போன்ற பரந்தளவு சைக்கிளோட்ட அணிகள் போன்றன அடங்கியிருக்கும்.

*Lumala* வினால் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட பரந்தளவு e-bikeகளில் சைக்கிளோட்டிகள் மலைநாட்டில் 500 கிலோ மீற்றர் தூரம் பயணம் செய்வார்கள். பாணந்துறை முதல் பெல்மடுல்ல ஊடாக ஹப்புதளை வரை முன்னெடுக்கப்பட்டு, ஹோர்ட்டன் சமவெளியினூடாக நுவரெலியாவுக்கு பயணிக்கும். பின்னர் நுவரெலியாவிலிருந்து கண்டி, கேகாலை ஊடாக கொழும்புக்கு திரும்பும்.

இந்தப் பயணத்தின் பிரதான அம்சங்களில் பல்வேறு பகுதிகளில் காணப்படும் பிளாஸ்ரிக்கள் சேகரிப்பு மற்றும் நகரங்களில் விழிப்புணர்வை ஏற்படுத்தல் போன்றன அமைந்திருக்கும்.


ஒரு வார காலப்பகுதிக்கு முன்னெடுக்கப்படும் இந்த பயணத்தின் போது, நிலைபேறான கழிவு முகாமைத்துவ செயன்முறைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தப்படும். குறிப்பாக, ஒற்றை பாவனை பொலிதீன் மற்றும் பிளாஸ்ரிக் வகைகள் தொடர்பிலும், ஹோர்ட்டன் சமவெளி போன்ற பகுதிகளில் சூழல் பாதுகாப்பு நிகழ்வுகள் போன்றனவும் முன்னெடுக்கப்படும். இவற்றுக்கு மேலாக, நிலைபேறான போக்குவரத்தை வலியுறுத்துவதுடன், சூழல்சார்-சுற்றுலாவையும் ஊக்குவிக்கும்.

கடந்த ஆண்டின் *Eco Ride* வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டிருந்தது. மார்ச் மாதம் முன்னெடுக்கப்பட்ட இந்நிகழ்வினூடாக பருத்தித்துறை முதல் தெவுந்தர முனை வரை சுமார் 800 கிலோ மீற்றர் தூரம் பயணம் செய்யப்பட்டிருந்தது.

*Eco Ride* என்பது ஸ்மார்ட் போக்குவரத்து மற்றும் சூழல் காப்பு பணிகளை முன்னெடுப்பதில் முன்னோடியாகத் திகழும், லுமானா என அறியப்படும், சிட்டி சைக்கிள் இன்டஸ்ட்ரீஸ் மெனுபக்ட்ஷரிங் (பிரைவட்) லிமிடெட், சுற்றுலாத் துறை அமைச்சு அடங்கலாக பல்வேறு இதர நிறுவனங்களுடன் இணைந்து முன்னெடுக்கும் திட்டமாகும்.

## சஞ்சாரக்க உதாவ வர்த்தக கண்காட்சியில்

# Sun Siyam பாசிக்குடா அறிமுகம்



கிழக்கின் இரம்மியமான கரையோரத்துக்கு முகப்பாகவும், மாலைதீவுகளின் *Sun Slyam Resorts* இன் அங்கமுமான *Sun Slyam* பாசிக்குடா, இன்றும் (17), நாளையும் (18) கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சஞ்சாரக்க உதாவ வர்த்தக கண்காட்சியில் தனது அறிமுகத்தை மேற்கொள்ளவுள்ளது. கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த கண்காட்சியில், C169 மற்றும் C176 ஆகிய இணைந்த காட்சிகூடங்களில் *Sun Slyam* பாசிக்குடா தனது பிரசன்னத்தைக் கொண்டிருக்கும். வருடாந்தம் நடைபெறும் இந்தக் கண்காட்சியில் ஆயிரக்கணக்கானவர்கள் பங்கேற்பது வழமை.

இலங்கையின் சுற்றுலாத் துறை மறுமலர்ச்சி கண்டு வருவதுடன், உலகில் சுற்றுப் பயணம் மேற்கொள்வதற்கான சிறந்த நாடுகளில் ஒன்றாக இலங்கையும் பல தளங்களில் தரப்படுத்தப்பட்டுள்ளது. இதனை கவனத்தில் கொண்டு, இலங்கை உள்ளக சுற்றுலா செயற்பாட்டாளர்கள் சம்மேளனம் (SLAITO), சஞ்சாரக்க உதாவ 2024 நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது.

பதினோராவது தடவையாக ஏற்பாடு செய்யப்படும் இந்த நிகழ்வு, தொழிற்துறையின் முன்னணி நாமங்கள் முதல், சிறிய மற்றும் நடுத்தரளவு சுற்றுலா சேவை வழங்குநர்கள், பல்வேறு பாகங்களைச் சேர்ந்த திறமையான தொழில்முயற்சியாளர்கள் போன்ற பல தரப்பினரைக் கொண்டிருக்கும். அதனூடாக அனைத்து தரப்பினருக்கும் தம்மை வெளிப்படுத்தி, பிரதான சுற்றுலாத்துறை செயற்பாட்டாளர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு வாய்ப்பளிக்கும்.

*Sun Siyam* பாசிக்குடாவினால் சொகுசான தங்குமிட வசதிகள், சிறந்த உணவருந்தல் அனுபவங்கள் மற்றும் புத்துணர்வூட்டும் ஸ்பா சிகிச்சைகள் போன்றன வாழ்நாளில் மறக்கமுடியாத அனுபவத்தை வழங்கும் வகையில் அமைந்துள்ளன. ஐந்து நட்சத்திர ஹோட்டலில், 34 இடவசதிகளைக் கொண்ட ஒன்று முதல் இரண்டு படுக்கையறைகள் பூந்தோட்டம் மற்றும் கடற்கரையை முகப்பாகக் கொண்ட பெவிலியன்களைக் கொண்டு அமைந்துள்ளன. சிறந்த உள்ளக காட்சியமைப்புகள், வர்ண அமைப்புகளையும் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளன.

*Sun Siyam* பாசிக்குடாவில் தங்கியிருப்பது என்பது அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய அனுபவத்தை வழங்குகின்றது. மாபெரும் சாகச அனுபவம், கலாசார அம்சங்கள் மற்றும் பிரத்தியேகத்தன்மை போன்றன சேர்க்கப்படுகின்றன. கிழக்கு பகுதியின் சிறந்த விருந்தோம்பல் அனுபவத்தை பெற்றுக் கொடுப்பதாக அமைந்துள்ளது. *infinity pool* அனுபவம் அல்லது *karaoke* இல் மனம் விரும்பியதைப் போல பாடல் பாடுவது. ஸ்பா சிகிச்சைகளுடன் ஓய்வு பெறுவது அல்லது டெனிஸ் அல்லது பூப்பந்தாட்டத்துடன் உடல்நிலையை திடமாக வைத்திருப்பது போன்ற அனுபவங்களைப் பெறலாம். உள்நாட்டு கலாசாரத்துடன் இணைவது அல்லது பாசிக்குடாவின் கரையோரத்தில் படகுகளில் சவாரி செய்வது, நட்சத்திரங்களின் கீழ் பிரத்தியேகமான இராப்போசணத்தை அருந்தி மகிழ்வது போன்ற பல சிறந்த அனுபவங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

விருந்தினர்களுக்கு *Slice & Grill* ஊடாக, விசேடமான *poolside* உணவருந்தும் அனுபவத்தை அல்லது *Beach Shack* இல் கரீபியன் பாணியில், வெப்பவலயத்துக்குரிய பானங்களை அருந்தும் அனுபவத்தை பெற்றுக் கொள்ளவும் முடியும்.

*Sun Siyam* பாசிக்குடாவில் விருந்தினர்களுக்கு ஒப்பற்ற அனுபவத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். மே மாதம் 17, 18ஆம் திகதிகளில் *Hall B* இலுள்ள C169 மற்றும் C176 காட்சிகூடங்களுக்கு விஜயம் செய்து எமது பிரதிநிதிகளுடன் உரையாடுங்கள்.



# பெண் எனும் பெருமையுடன்

கற்பகத் தருவாய் தரணியில் உதித்தவள்
சக்தியின் கடாட்சமாய் சாந்தசொருபியவள்
கண்ணகியாய் கற்பில் சிறந்தவள்
சரஸ்வதியாய் கல்வியிலும் வேள்வியவள்

அன்னையாய் அன்பிற் சிறந்தவள்
ஆதவனாய் ஆளப்பிறந்தவள்
இசையாய் இனிமைப்பயப்பவள்
ஈரநெஞ்சிற்கு ஈடில்லாதவள்

குடும்பத்தின் கூரையவள்
தன்னம்பிக்கை தாரகையவள்
அழகிற்கு ஆதாரமவள்
ஆணினத்தின் ஆழம்விழுதவள்

உறவிற்கு உவமானமானவள்
கலைகளின் கருவுமானவள்
பலகாலம் சிறைவாசப் பட்டவள்
வன்முறையால் வாழ்வைத் தொலைத்தவள்

மதியால் விதியை வென்றவள்
மலர்கிறாள் பாரதியின் மகளாகின்றாள்
உயர்கிறாள்
உயரம் தொடுகின்றாள்
எழுகின்றாள்
எழுச்சியடைகின்றாள்.

– பிரகதி–



# வரலாற்றை சுமப்பவர்கள்

அவர்கள் கதையை
கேட்கவும் யாருமில்லை..!
அவர்களை
கைகொடுத்து தூக்கவும் யாருமில்லை..!

அவர்களைபடம்
எடுக்கவும் யாருமில்லை..!
அவர்களுக்குபாடம்
நடத்தவும் யாருமில்லை..!
அவர்களைவிரல் நீட்டிகதைக்கவும்
யாருமில்லை...!
அவர்கள் செயலுக்கு
விலங்கிட்டு அழைக்கவும் நாதியில்லை..!

அன்றுமுன்னுக்கு
நின்றவர்கள் தான்..
அடையாளம் தெரியாமல்..!
இன்றும்...
முன்னுக்கு நிற்கிறார்கள்
யாருக்கும் புரியாமல்..!

அன்று,
கடைசிநேரத்தில்,
அவர்களை
முள்ளிவாய்க்கால்
எள்ளிநகையாடியது..!
இன்று...?

அன்று,
இடைநடுவில்
வட்டுவாகல் அவர்களை
விட்டுவிலகியது..!
இன்று...?

அன்று,
அவர்கள்
நா நனைக்கபோனதும்,
நந்திக்கடல் நாவறண்டு
போனது...
இன்று...?

கம்பிவேலிக்குள்ளும்
அவர்கள் காலம்
உருண்டது
இன்று..?

தலைவனைத் தொலைத்த
தாயும்...
தந்தையை இழந்த
மகளும்...
இத்தனைஆண்டுகள்
கடந்தும்!
அதேநினைவுகளுடன்...
அதேகஞ்சியைத்தான்...
குடித்துக் கொண்டிருக்கிறார்கள்.
அவர்கள் வாழ்வில்,
காலம்
கஞ்சியைமட்டும்
கடத்திக்
கொண்டிருக்கவில்லை...




– இரவிகாந்தன் –
திருகோணமலை

# விடை தெரியா பயணத்தில்...

நேற்று.....
என்றும் இல்லாத எனை
சிலிர்க்க வைத்த பேருந்து பயணம்.
ஜன்னலோர இருக்கையை தவறவிட்டு
கிடைத்த இருக்கையை
தக்கவைத்துக் கொண்டேன்.
மழலை மொழியில் மயங்கும் நான்,
ஏனோ? அருகிலிருந்தஅந்த
அழகின் வதனம் இரசிக்க மறந்தேன்.
திடுக்கென தொடர்ந்த பேருந்தின் சத்தம்
அவன் கைகளை என் கைகளில் கோர்த்து
அந்த பிஞ்சு விரல்களால் சோர்ந்திருந்த
என் கைகளை இறுகப் பிடிக்க வைத்தது.
தாயென நினைத்தானோ?
குனிந்து பார்த்தும் அவன் கை நகரவில்லை.
எனை அணைத்தபடியே இருந்தான்.
கடந்தகால நினைவுகளோடு
குழப்பம் நிறைந்த மனதோடு
கட்டாயத்தின் பேரில்
வாழ்ந்து கொண்டிருக்கும் எனக்கு,

அவன் பிஞ்சு விரல்களின் தீண்டல்
இன்றைப் பார் என்றதா?
இழந்த உனை மீட்டெடு என்றதா?
அழகொன்று உன் அருகிலிருக்க
என் யோசனை உனக்கு என்றானா?
அறியேன்....
அவனைப் பார்த்து
புன்சிரிப்போடு நினைத்துக் கொண்டேன்,
உன் பயம் நீங்கும் வரை
உன்னோடு பயணித்துக் கொள்கிறேன்.
என் தனிமை விலகும் வரை
உன் பிஞ்சுக் கரங்களை
என் கை இடுக்கிலிருந்து
பிரிந்துவிடாமல் பார்த்துக்கொள்.
என் கன்னங்களை நனைத்த
கண்ணீர்த் துளியை மெதுவாக துடைத்து,
ஆழப் புதைந்த புன்னகையை
கடன் வாங்கி
அவனோடு விளையாட ஆரம்பித்தேன்....



– கிருபதாஸ் நிவேதிகன்–

# தலைமுறை

வகைகூற வழியுமின்றி வாழ்க்கையில் பிடிப்புமின்றி
தொலைத்துவிட்ட தொன்மைகளை எடுத்துரைத்தும் பயனுமின்றி
வியப்புமிகு விந்தைகளால் விளைந்த பல வினயங்களை
கெடுத்த இச்சந்ததிகள் படித்திடாத பாடங்களை

தொடுத்துரைத்து மகிழ்வுறுத்தி கனிவுடனே நிலைநிறுத்தி
தடுத்து நின்ற தடைகளையே உடைத்தெறியும் வலிமையூட்டி
நலிவுற்ற நமதருமைகளை கடைப்பிடிக்கவழி சமைத்து
கலியுகத்தின் இடைவெளியை கச்சிதமாய் தெளிவுறுத்தி

அன்பினை உரமாயூட்டி நல்அறிவினை அறுவடையாக்கும்
பண்புடன் பாங்கினை மதிப்புடன் உவந்தளித்தோரே
சிந்தனை சிறப்புற வேண்டும் பேராநீபல
விந்தைகள் புரிந்திடவே நல்வழிகாட்டி நின்றனரே

வரைமுறைவகையறியாது வழித்தடம் உணர்ந்திடாமல்
வளர்ந்திடும் பயிரிகளே வருங்காலமொட்டுக்களாம்
தலைமுறை தலைமுறையாக தரணியில் தளிர்த்து நின்ற
நெறிமுறை பல தொலைத்தோம் நவீனம் என்றுரைத்தோம்



– தனுஅருண் –
திருகோணமலை




# நினைவில் இருக்க வேண்டிய நாள்



நாகேஸ்வரன் மிரேகா

யுத்தம் நிறைவடைந்து காலங்கள் பலவும் உருண்டோடிய நிலையில், இறுதி யுத்தத்தின் அவல ஓலங்கள் இன்றும் தமிழ் மக்களின் மனத்தில் நீறு பூத்த நெருப்பாகத்தான் இருக்கிறது. 2009ஆம் ஆண்டு இறுதிப்பகுதிகளில் இரத்த வெள்ளத்தால் நிறைந்திருந்த முள்ளிவாய்க்கால் இன்றும் தமிழர் மனதில் கனத்த வடுக்களாகத்தான் இருக்கிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் 17 மே 2009 அன்று தோல்வியுற்றனர்.

மே 18 அன்று உயிரை கையில் பிடித்துக்கொண்டு சரணடைந்த அப்பாவி பொதுமக்கள், வயது வந்த முதியோர், பச்சிளங் குழந்தைகள், நிறைமாத கர்ப்பிணிகள், இளைஞர் யுவதிகள் என அனைவரும் ஒரு பிடி சோற்றுக்காக ஏங்கி இருந்த அந்த இறுதி தருணத்தில், இருந்த அரிசை கொண்டு கஞ்சி காய்ச்சி அதனை ஒரு மிடர் பருகு முன்பே கொத்தாக வீசப்பட்ட கொத்து குண்டுகளும், தடைசெய்யப்பட்ட ஆயுதங்களும் அந்த அப்பாவி உயிர்களைக் காவு கொண்டது.

இரத்த வாடை மாறாத முள்ளிவாய்க்காலையும், தமிழர் மனதில் என்றும் கரிநாளாக இருக்கும் இவ் மே 18ஐயும் நினைவு கூரும் முகமாகவும் அன்று அழித்தொழிக்கப்பட்ட அப்பாவி உயிர்களின் ஆத்ம சாந்தி வேண்டியுமே இந்த மே 18ஐ தமிழ் மக்கள் இன்றும் நினைவு கூருகின்றனர்.

இப்போரானது சிங்களவருக்கும், தமிழருக்கும் இடையில் பல விடயங்கள் தொடர்பாக நிலவிவரும் பாரிய கருத்து முரண்பாடுகளின் மூலத்தைக் கொண்டதாகும். 23 ஜூலை 1983 முதல் 26 ஆண்டுகள் நடைபெற்ற இப்போர் 2009இல் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டதுடன் முடிவுக்கு வந்தது.

போரின் ஆரம்பக் காலத்தில் இலங்கைப் படைகள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட பகுதிகளை மீளவும் கைப்பற்ற முனைந்தனர். அரசுக்கு எதிராகப் புலிகள் மேற்கொண்ட உத்திகள் தடையாக இருந்தாலும், புலிகளை அமெரிக்கா, இந்தியா, கனடா, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் உட்பட 32 நாடுகள் பயங்கரவாத அமைப்பாகப் பட்டியலிட்டனர்.

இலங்கை அரச படைகள் கட்டவிழ்த்துவிடப்பட்ட திட்டமிட்ட மோசமான மனித உரிமை மீறல், பலவந்தமாகக் காணாமல் போதல், நீதிக்குப் புறம்பான செயற்பாடுகள் என்பவற்றுக்காகக் குற்றம் சாட்டப்பட்டனர்.

இரு தசாப்தங்களாக போர் மற்றும் தோல்வியுற்ற நான்கு சமாதான பேச்சு வார்த்தைகள் மற்றும் 1987-1990 காலப்பகுதியில் இலங்கையில் நிலை கொண்ட இந்தியப் படைகளின் தோல்வியில் முடிந்த பிரசன்னம் என்பவற்றின் பின் மார்கழி 2001இல் போர் நிறுத்த ஒப்பந்தம் அறிவிக்கப்பட்டு,சர்வதேச மத்தியஸ்துடன் போர் நிறுத்தம் 2002இல் மேற்கொள்ளப்பட்டது.

ஆயினும், 2005 பிற்பகுதியில் முரண்பாடு ஆரம்பமாகி, பின்னர் விடுதலைப் புலிகளுக்கு எதிராக யூலை 2006இல் அரசு இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டது. இதனால் புலிகள் கிழக்கு மாகாணத்திலிருந்து வெளியேற வேண்டி ஏற்பட்டது.

2007இல் அரசாங்கம் தாக்குதலை வடபகுதிக்கு மாற்றி, பல தடவைகள் புலிகள் போர் நிறுத்தத்தை மீறியதாகக் குற்றச்சாட்டி ஒருதலைபட்சமாகப் போர் நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து வெளியேறுவதாக அறிவித்தது. இதன் மூலம் புலிகளின் தங்கள் தலைமைச் செயற்பாட்டிடமாக கொண்டிருந்த கிளிநொச்சி, பிரதான இராணுவ மையமாக இருந்த முல்லைத்தீவு, முழு யு9 நெடுஞ்சாலை ஆகிய இடங்களைக் கைப்பற்றி, இதன் பின்னர் ஐ.நாவினால் இலங்கை அரசும் புலிகளும் போர்க் குற்றம் புரிந்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டனர்.

அன்றிலிருந்து விடுதலைப் புலிகள் முற்றாக அழிக்கப்பட்டனர் என்றதன் அடிப்படையில் முழுமையாக இலங்கையில் நடந்த அனைத்து போர்க்குற்றங்களுக்கும் பொறுப்புக்கூற வேண்டிய கடப்பாடும், தார்மீக பொறுப்பும் இலங்கை அரசுக்கு இருக்கிறது. ஆனால், இன்றுவரை இலங்கை அரசு பொறுப்புக் கூறலிலிருந்து விடுபடுவதோடு மட்டுமில்லாது. நினைவில் இருக்க வேண்டிய நாள் !! புனித ஆத்மாக்கள் சாந்தி அடையட்டும்.

வடகிழக்கு அப்பாவி தமிழ் மக்கள் மீது பெரும்பான்மை சமூகத்தின் ஆதிக்கத்தையும், அடக்குமுறையையும் கட்டவிழ்த்து விட்டிருக்கிறது.

இன்றுவரை வட கிழக்கு மக்கள் தமது அடிப்படை உரிமைகளுக்காகவும் தமது சுயமரியாதைக்காகவும் இலங்கை அரசிடம் போராடிக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

# சாதனை படைத்த இலங்கைப் பெண்கள்



நாட்டின் பல பாகங்களிலுமுள்ள பெண் ஒப்பனை கலைஞர்கள் மற்றும் சிறு கைத்தொழில் செய்யும் பெண்களை இனங்கண்டு அவர்களின் முன்னேற்றத்திற்காக “மேக்கப் ஆர்ட்டிஸ்ட் கிளப் ஒப் லங்கா” (Makeup Artist clup of lanka) மூலம் பல்வேறு உதவிகளைச் செய்யவுள்ளதாக அதன் தலைவி அனுஷா குமரேசன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு கொழும்பு 4, பம்பலப்பட்டி லோரன்ஸ் ரோட் “AVS டவரில்” செவ்வாய்க்கிழமை (14) நடைபெற்றது.


கொழும்பில் 250 இற்கும் மேற்பட்ட ஒப்பனை கலைஞர்கள் கலைத் திறமைகளை வெளிக்காட்டி உலக சாதனையொன்றை ஜூலை மாதம் 21ம் திகதி நிலை நாட்டவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.





## முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறும் நிகழ்வு





வ.சக்தி

முள்ளிவாய்க்கால் இனப் படுகொலையின் 4ஆவது நாளான புதன்கிழமை(15) மாலை மட்டக்களப்பு கிரான் கிராமத்தில் மட்டக்களப்பு சிவில் சமூகத்தின் ஏற்பாட்டில், முள்ளிவாய்க்காலில் இனப்படுகொலை செய்யப்பட்ட மக்களை நினைவு கூர்ந்து கஞ்சி காய்ச்சி மக்களுக்கு பரிமாறப்பட்டன.





## ஆசீர்வாத பூஜை செய்த கிராம உத்தியோகஸ்தர்கள்

எம்.கிருஸ்ணா

சுகயீன விடுமுறை போராட்டத்தில் தொடர்ந்து மூன்றாவது நாளாகவும் ஈடுபட்டு வரும் கிராம உத்தியோகஸ்தர்கள், சரவமத ஆசீர்வாத பூஜைகளில் வியாழக்கிழமை (16) ஈடுபட்டதுடன், சர்வமத தலைவர்களிடத்தில் தமது கோரிக்கைகள் அடங்கிய மஜரையும் கையளித்து தமது கோரிக்கைகள் தொடர்பிலும் விளக்கமளித்தனர்.

இலங்கை கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கத்தின் நோர்வூட் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட இலங்கை கிராம சேவகர்கள் சங்கத்தின் தலைவர் நிசாந்த குமாரகே தலைமையில் ஹட்டன் நகரிலுள்ள இந்து ஆலயம், பௌத்த விகாரை மற்றும் பள்ளிவாசலிலும் ஆசீர்வாத பூஜைகள் முன்னெடுக்கப்பட்டன.





## இரண்டு வீடுகள் கையளிப்பு

எச்.எம்.எம்.பர்ஸான்

கோறளைப்பற்று–மத்தி வாழைச்சேனை பிரதேச செயலக பிரிவில் சமுர்த்தி ரன்விமன வீடமைப்பு திட்டத்தில் இரண்டு வீடுகள் பயனாளிகளுக்கு வியாழக்கிழமை (16) கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில், மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எஸ்.ராஜ்பாபு, பிரதேச செயலாளர் எஸ்.எச்.முசம்மில், மாவட்ட பிரதம கணக்காளர் எம்.எஸ்.பசீர், உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.ரமீசா, மாவட்ட செயலக தலைமை முகாமையாளர் ஜே.எப்.மனோகிதராஜ், பிரதேச செயலக தலைமை முகாமையாளர் எஸ்.ஏ.பசீர், முகாமைத்துவ பணிப்பாளர் எம்.எல்.ஏ.மஜீத், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.






## சந்நிதியான் ஆச்சிரமத்தால் உதவிகள்

எஸ்.தில்லைநாதன்

யாழ்ப்பாணம்– வடமராட்சி தொண்டமனாறு செல்வ சந்நிதியான் ஆலயத்திலிருந்து சைவமரபு– பாரம்பரியமிக்க கதிர்காம கந்தன் ஆலயத்திற்கு பாதயாத்திரை செல்லும் யாத்திரிகர்களுக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால், தருமபுரம் – நெத்தலியாறு கிராமத்தில் அமைந்துள்ள பிள்ளையார் ஆலயத்தில் வைத்து சத்துணவு பொதிகள், ஜீவாகரம் மற்றும் பழவகைகள் என்பன வழங்கி வைக்கப்பட்டன. சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் சென்ற சந்நிதியான் ஆச்சிரமத்தினரே இத்தானங்களை வழங்கிவைக்கப்பட்டன.




ஸ்லோவாக்கியா

துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கான ஸ்லோவாக்கியா பிரதமரின்

# உடல்நிலை கவலைக்கிடம்

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான ஸ்லோவாக்கியா (Slovakia) பிரதமர் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவித்துள்ளன.

ஸ்லோவாக்கியா நாட்டின் பிரதமரான 59 வயதான ரொபர்ட் ஃபிக்கோ மீது புதன்கிழமை (15) துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதை அடுத்து துப்பாக்கிச்சூடு நடத்திய நபரை பொலிஸார் கைது செய்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.



மத்திய ஐரோப்பிய நாடான ஸ்லோவாக்கியா தலைநகர் ப்ராகுக்கு 150 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள ஹாண்ட்லோவா நகரில் தனது ஆதரவாளர்களிடையே பிரதமர், உரையாற்றிக் கொண்டிருந்தபோதே துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது.

அப்போது அவரை நோக்கி ஒருவர் 4 முறை துப்பாக்கியால் சுட்டுள்ளார் என்றும் இதில் ஃபிக்கோவின் வயிற்றுப் பகுதியில் குண்டுகள் பாய்ந்ததாகவும் தகவல்கள் வெளியாகி இருந்தது.

இதில் படுகாயமடைந்த பிரதமர், உடனடியாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், தொடர்ச்சியாக சிகிச்சைப் பெற்று வருவதாகவும் அவரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில், பிரதமர் மீது தாக்குதல் நடத்துவது ஜனநாயகத்தின் மீது நடத்தப்படும் தாக்குதல் என்றும் நாட்டில் பரப்பப்படும் வெறுப்புணர்வே இதுபோன்ற தாக்குதலுக்குக் காரணம் என்றும் அந்நாட்டு ஜனாதிபதி ஜுவானா கேபுடோவா தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூர்

சிங்கப்பூரின் புதிய பிரதமராக

## லோரன்ஸ் வோங்



சிங்கப்பூரில் கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக பிரதமராக இருந்த லீ சியென் தனது பதவியை இராஜினாமா செய்ததைத் தொடர்ந்து, துணை பிரதமராக இருந்த லோரன்ஸ் வோங் (Lawrence Wong) பிரதமராகியுள்ளார். இருவரும் ஆளும் பி.ஏ.பி. கட்சியை சேர்ந்தவர்கள்.

இந்நிலையில், லோரன்ஸ் வோங் சிங்கப்பூரின் நான்காவது பிரதமராக புதன்கிழமை(15) பதவியேற்றுக்கொண்டார். அவருக்கு அந்நாட்டு ஜனாதிபதி, தர்மன் சண்முகரத்னம் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

அதேசமயம், புதிய பிரதமர் பொறுப்பேற்ற போதிலும், அமைச்சரவையில் மிகப்பெரிய மாற்றம் செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கீவ்

ரஷ்யாவின் தீவிர தாக்குதலால்

## ஜனாதிபதியின் வெளிநாட்டு பயணங்கள் இரத்து

உக்ரைன் மீது, ரஷ்யா தொடர்ந்து தாக்குதலைத் தீவிரப்படுத்தி வருவதால், உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியின் வெளிநாட்டுப் பயணங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

உக்ரைன் மீது கடந்த 2022 பெப்ரவரி 24ஆம் திகதி ரஷ்யா போர் தொடுத்த நிலையில், 2 ஆண்டுகளைக் கடந்தும் போர் நீடிக்கிறது.

இந்த போரில் அப்பாவி மக்கள் உயிரிழந்து வருகின்றனர்.

இந்நிலையில், உக்ரைன் மீதான தாக்குதலை ரஷ்யா தீவிரப்படுத்தி உள்ளது. புதன்கிழமை(15) அதிகாலை உக்ரைனின் 9 ஆளில்லா விமானங்கள், 2 வில்ஹா ரொக்கெட்டுகள், 2 ரேடார் எதிர்ப்பு ஹார்ம் ஏவுகணைகளை ரஷ்ய படை சுட்டு வீழ்த்தியது.

இதையடுத்து உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தன் ஸ்பெயின் மற்றும் போர்ச்சுக்கல் பயணங்களை இரத்து செய்துள்ளார் என சர்வதேச தகவல்கள் தெரிவிக்கின்றன.

திருப்பூர்

வடமாநில தொழிலாளி கொலை வழக்கில்

## மூன்று சிறுவர்கள் கைது

திருப்பூரில், பீகார் மாநில தொழிலாளி குத்திக் கொலை செய்யப்பட்ட வழக்கில் மூன்று சிறுவர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

திருப்பூர் கணியாம்பூண்டி பகுதியில் செயல்பட்டு வரும் குறித்த தனியார் நிறுவனத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட புலம்பெயர் தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

இந்த நிறுவனத்தில் பீகார் மாநிலத்தைச் சேர்ந்த ஆகாஷ் குமார் (22) என்ற இளைஞர் பணியாற்றி வந்தார்.



இந்நிலையில், கடந்த 14ஆம் திகதி இரவு பணி முடிந்து தனது அறைக்கு அவர் தனியாகச் சென்று கொண்டிருந்த போது, இருசக்கர வாகனத்தில் வந்த மூன்று பேர், அவரை சுற்றிவளைத்து கைப்பேசியை பிடுங்க முயன்றுள்ளனர்.

அவர் அதற்கு மறுத்ததால், மூன்று பேரும் சேர்ந்து அவரை கத்தியால் குத்தி விட்டு கைப்பேசியை பறித்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர். பலத்த காயமடைந்த ஆகாஷ், அங்கிருந்து தப்பி தனது நண்பர்களைச் சந்தித்து நடந்த விடயங்களைக் கூறியுள்ளார்.

இதையடுத்து அவர், திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

இந்நிலையில், சிகிச்சை பலனின்றி புதன்கிழமை(15) காலை ஆகாஷ் உயிரிழந்தார். இந்த தகவலை அறிந்த சக புலம்பெயர் தொழிலாளர்கள், நிறுவனத்தின் உள்ளே போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேசமயம், இந்த கொலை சம்பவம் தொடர்பாக சிறுவர்கள் 3 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அவர்களிடம் நடத்திய முதற்கட்ட விசாரணையில், மது போதையில் கைப்பேசியை பறிக்க முயற்சி செய்தபோது, அவர் தர மறுத்ததால் கத்தியால் குத்தியதாகத் தெரியவந்துள்ளது.

தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வரும் நிலையில், இவர்கள் மேல் வேறு ஏதேனும் வழக்குகள் உள்ளனவா என்பது குறித்தும் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

புதுடெல்லி

## இந்தியாவில் நடைமுறைக்கு வந்த சிஏஏ சட்டம்



இந்தியாவில், குடியுரிமை திருத்தச் சட்டத்தின் (சிஏஏ) கீழ் முதல் முறையாக 14 பேருக்கு இந்தியக் குடியுரிமை சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இதன் மூலம் சிஏஏ சட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது.

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் இருந்து, கடந்த 2014 டிசம்பர் 31 அன்று அல்லது அதற்கு முன்பாக, மத ரீதியாகத் துன்புறுத்தப்பட்ட முஸ்லிம் அல்லாத இந்து, சீக்கியர், ஜெயின், பௌத்தம், பார்சி மற்றும் கிறிஸ்தவர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்குவதற்கான குடியுரிமை திருத்தச் சட்டம் 2019ஆம் ஆண்டு டிசம்பரில் கொண்டு வரப்பட்டது.

இதற்கு ஜனாதிபதி ஒப்புதல் அளித்த நிலையில், 4 ஆண்டு தாமதத்திற்குப் பிறகு கடந்த மார்ச் 11ஆம் திகதி சட்ட விதிகள் அறிவிக்கப்பட்டன.

இதைத் தொடர்ந்து சிஏஏ சட்டம் அமலுக்கு வந்ததாக ஒன்றிய அரசு அறிவித்தது. இதற்கு கடும் எதிர்ப்பு கிளம்பியது. ஆனாலும் இச்சட்டத்தின் கீழ், தகுதி வாய்ந்தவர்கள் குடியுரிமை கோரி விண்ணப்பிக்கத் தனியாக இணையதளம் உருவாக்கப்பட்டது.

அதன் மூலம் விண்ணப்பம் செய்த 14 பேருக்கு பல கட்ட ஆய்வுகளுக்குப் பின் இந்தியக் குடியுரிமை சான்றிதழ்களை ஒன்றிய உள்துறை செயலாளர் அஜய் குமார் பல்லா, புதன்கிழமை (15) வழங்கியதாக அமைச்சகத்தின் அதிகாரப்பூர்வ செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்த சட்டம் கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து கடந்த 2019இல் நாட்டின் பல பகுதிகளிலும் போராட்டங்கள் வெடித்தன. இது, பாரபட்சமானது என பல தரப்பினர் குற்றம்சாட்டினர்.

மேற்கு வங்க முதல்வர் மம்தா உள்ளிட்ட தலைவர்கள் சிஏஏ சட்டத்தை அமல்படுத்த விட மாட்டோம் என கூறி வரும் நிலையில், 14 பேருக்குக் குடியுரிமை வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.




# ஐ.பி.எல்: ராஜஸ்தானை வென்ற பஞ்சாப்

இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), குவஹாத்தியில் புதன்கிழமை(15) நடைபெற்ற ராஜஸ்தான் றோயல்ஸ் உடனான போட்டியில் பஞ்சாப் கிங்ஸ் வென்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற ராஜஸ்தானின் அணித்தலைவர் சஞ்சு சாம்சன் தமதணி முதலில் துடுப்பெடுத்தாடுமென அறிவித்தார்.

அந்தவகையில் முதலாவதாகத் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் ஆரம்பத்திலேயே யஷஸ்வி ஜைஸ்வாலை அணித்தலைவர் சாம் கர்ரனிடம் இழந்தது. பின்னர் அடுத்தடுத்த ஓவர்களில் சாம்சன், டொம் கொஹ்லர்-கட்மோரேயையும் நாதன் எலிஸ், ராகுல் சஹரிடம் இழந்தது.

அடுத்து வந்த ரியான் பராக்கும், இரவிச்சந்திரன் அஷ்வினும் ஓட்டங்களைச் சேர்த்த நிலையில், 28 (19) ஓட்டங்களுடன் அர்ஷ்டீப் சிங்கிடம் அஷ்வின் வீழ்ந்தார். அடுத்த ஓவரிலேயே கர்ரனிடம் வந்த வேகத்திலேயே துருவ் ஜுரேல் ஆட்டமிழந்தார். அதற்கடுத்த ஓவரில் சஹரிடம் றொவ்மன் பவல் வீழ்ந்தார்.

ஜுரேலுக்குப் பதிலாக தாக்கம் செலுத்தும் மாற்றுவீரராகக் களமிறங்கிய டொனவன் பெரைரா பட்டேலிடம் சிறிது நேரத்தில் வீழ்ந்ததுடன், பட்டேலின் இறுதி ஓவரில் 48 (34) ஓட்டங்களுடன் பராக்க்கும் அவரிடம் விழ 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 144 ஓட்டங்களை ராஜஸ்தான் பெற்றது.


பதிலுக்கு 145 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பஞ்சாப், ட்ரெண்ட் போல்டின் முதலாவது ஓவரிலேயே பிரஹ்சிம்ரன் சிங்கை பறிகொடுத்தது. ஆவேஷ் கான் வீசிய ஐந்தாவது ஓவரில் றைலி றொஸோ, ஷஷாங் சிங் ஆகியோர் வீழ்ந்தனர். இரண்டு ஓவர்களில் யுஸ்வேந்திர சஹாலிடம் ஹொனி பெயார்ஸ்டோவும் வீழ்ந்தார்.

குறிப்பிட்ட நேரத்தில் ஜிதேஷ் ஷர்மாவும் சஹாலிடம் வீழ்ந்தபோதும் கர்ரனின் ஆட்டமிழக்காத 63 (41) ஓட்டங்களோடு, 18.5 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்த நிலையில் பஞ்சாப் வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக கர்ரன் தெரிவானார்.

இந்நிலையில், மும்பையில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸை மும்பை இந்தியன்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.

## கோப்பா இத்தாலியா: சம்பியனான ஜுவென்டஸ்




இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான விலகல் முறையிலான கோப்பா இத்தாலியா தொடரில் ஜுவென்டஸ் சம்பியனானது.

ஸ்டியோ ஒலிம்பிக்கோவில் வியாழக்கிழமை (16) நடைபெற்ற அத்லாண்டாவுடனான இறுதிப் போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் வென்றே ஜுவென்டஸ் சம்பியனானது.

ஜுவென்டஸ் சார்பாகப் பெறப்பட்ட கோலை டுஸன் விளாகோவிச் பெற்றிருந்தார்.

## மியூனிச்சிலேயே தொடரப் போகும் துஷெல்?



ஜேர்மனியின் புண்டெலிஸ்கா கால்பந்தாட்டக் கழகமான பயேர்ண் மியூனிச்சின் பயிற்சியாளரான தோமஸ் துஷெல் தொடர்ந்தும் கழகத்தின் பயிற்சியாளராக தொடர்வாரென எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னதாக நடப்புப் பருவகாலத்துடன் மியூனிச்சின் பயிற்றுவிப்பாளர் பதவியிலிருந்து துஷெல் விலகுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

பின்னர் மியூனிச் இலக்கு வைத்த பயிற்றுவிப்பாளர்களான ஸ்கெபி அலோன்ஸோ, றல்ஃப் றங்னிக் ஆகியோர் பயிற்றுவிப்பாளர்களாக வர மறுத்து விட்டனர்.

சகலதுறைவீரர்களுக்கான தரவரிசையில்

# நான்காமிடத்துக்கு முன்னேறிய ராசா

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளுக்கான சகலதுறைவீரர்களின் தரவரிசையில் நான்காமிடத்துக்கு சிம்பாப்வேயின் அணித்தலைவர் சிகண்டர் ராசா முன்னேறியுள்ளார்.

பங்களாதேஷுக்கெதிரான கடைசி இரண்டு போட்டிகளில் 89 ஓட்டங்களைப் பெற்றதோடு, ஒரு விக்கெட்டையும் கைப்பற்றிய நிலையிலேயே ஆறாமிடத்திலிருந்து இரண்டு இடங்கள் முன்னேறி நான்காமிடத்தையடைந்துள்ளார்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

1.ஷகிப் அல் ஹஸன், 2.வனிடு ஹஸரங்க, 3.மொஹமட் நபி, 4.சிகண்டர் ராசா, 5.ஏய்டன் மார்க்ரம்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

1.சூரியகுமார் யாதவ், 2.பில் ஸோல்ட், 3.மொஹமட் றிஸ்வான், 4.பாபர் அஸாம், 5.ஏய்டன் மார்க்ரம், 6.யஷஸ்வி ஜைஸ்வால், 7.றைலி றொஸோ, 8.ஜொஸ் பட்லர், 9.றீஸா ஹெண்ட்றிக்ஸ், 10.டேவிட் மலான்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

அடில் ரஷீட், 2.வனிடு ஹசரங்க, 3.அகீல் ஹொஸைன், 4.அக்ஸர் பட்டேல், 5.மகேஷ் தீக்ஷ்ன, ரவி பிஷ்னோய், 7.ஜொஷ் ஹேசில்வூட், தப்ரையாஸ் ஷம்சி, 9.ரஷீட் கான், 10.றீஸ் டொப்லி



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 17 மே 2024, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.